<u>DEPOSITION OF WITNESS</u>
<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM</u>
<u>JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.</u>

<u>Case No.O.S. No. 18 /2024</u>

**வா.சா. 1 – பொன்னுச்சாமி த–பெ. அப்பாச்சிக்கவுண்டர் நாள் – 20.01.2026.**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கினை நான் தடத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். என் சொத்து உள்ள காலை எண். 514/12ல் உள்ளது. 1ம் பிரதிவாதி சண்முகசுந்தரமூர்த்தியின் பூமி எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் 514/13. வழக்குரையினை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சொத்து விவரத்தில் க.ச.எண். 514/13 என்பது இடம் பெறவில்லை என்றால் க.ச.எண். 514/13 தான் போட்டிருக்க வேண்டும் ஆனால் க.ச.எண். 514/3 என்றுள்ளது. வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் சொத்தான க.ச.எண். 514/13 என்பது இடம் பெறவில்லை என்பதால் நான்அவருக்கு எதிராக பரிகாரம் கோர இயலாது என்றால் தவறு. சொத்து எனக்கு 1952ம் வருட பத்திரத்தின் அடிப்படையில் வந்தது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான் வழக்குரையில் கூறியுள்ள தடத்தினை பற்றி குறிப்பிட்டு கூறிடவில்லை என்றால் அந்த தடம் மூதாதையர்களால் வாய் மொழியாக சென்று வந்த தடம் ஆகும். உண்மையிலேயே தடம் இருந்திருந்தால் அதை பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதியிருப்பார்கள் என்றும் அவ்வாறு தடம் இல்லை என்பதால் தான் அது பத்திரத்தில் எழுதப்படவில்லை என்று சொன்னால் தவறு.

2. தடபாத்திய ஒப்பந்த பத்திரத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், அப்போது நான் வெளியூர் சென்றுவிட்டேன். நான் அந்த பத்திரத்தில் ஒரு தரப்பினர் இல்லை என்பதால் அதனடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்று சொன்னால் தவறு. எங்கள் வீட்டிற்கு நத்தத்தின் வழியாக சென்று வர தடம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள 1952 பாக பிரிவினை பத்திரத்தில் என் சொத்து நத்தத்திற்கு தெற்கு என்று செக்குபந்தி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாக சாசனம் செய்து கொண்டிருந்த நாள் முதல் நான் அந்த நத்தத்தின் வாயிலாக தான் சென்று வந்தேன் என்று சொன்னால் தவறு, நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள தடத்தின் வாயிலாக தான் சென்று வந்தேன் அவர்கள் தான் முடக்கிவிட்டார்கள். 1ம் பிரதிவாதி சண்முகசுந்தரமூர்த்தி என்பவரை தவிர மற்ற பிரதிவாதிகள் என்னுடன் இணக்கமாக தான் இருக்கிறார்கள் என்றால் தவறு. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்கனவே குடும்ப பிரச்சனை இருந்து வருகிறது

என்றால் தவறு. எங்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்தது என்றும், அதனால் அவர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எனக்கு 1ம் பிரதிவாதியின் பூமியில் எந்த உரிமையும் இல்லை என்பதால் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கோர தகுதியற்றவர் என்றால் தவறு. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

sd/-V.Monika
District Munsif Cum Judicial Magistrate,
Annur.